# இனத் துவேஷம் கொண்டவர் ஒன்றுசேர்கிறார்கள்

## — 'வாசு' எச்சரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற மனத் திடம் அரசுக்கு ஏற்படும் வரை இதற்கு முடிவு ஏதும் ஏற்படாது. வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர் வொன்றை முன்வைக்காது அரசு புலிகளுடன் பேச்சு நடாத் தியும் பயனில்லை;

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி தலைவர் திரு. வாசு தேவநாணயக்கார தெரி வித்துள்ளார்; அவர் மேலும் கூறுகையில்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடாத்துவதாக கூறி அரசு 10 வருடங்களாக தமிழ் மக் (4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 2 இதழ் 4
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-2-1994

## தூய தமிழில் கடைகளின் பெயர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ஈழத்தின் சகல பிரிவிலும் தூயதமிழ் பாவனை குறித்து நேற்று யாழ் மாவட்டஅரசியல்துறை செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் [illegible] ஆராயப் பட்டது.

இதன் முதற்கட்டமாக அடுத்த மூன்றுமாத காலத்தினுள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் (கடைகள்) தூயதமி (4-ம்பக்கம் பார்க்க)

● நேற்றுக் காலை

# இரு பொம்மர்கள், ஒரு ஹெலி

# வலி-வடக்கில் கடும் தாக்குதல்

## பலாலி படை ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதியான புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் நேற்றுக்காலை இருபொம்மர்களும், ஹெலிகொப்டர் ஒன்றும் பலதடவைகள் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இதனால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 11.00 மணி போது ஹெலிகொப்டர் தொடர்ச்சியாக இடம் பெற்ற [illegible] வலி [illegible] தொடர்ச்சியான [illegible] றது. இதனால் இப்பகுதியில் இடம் பெற்றன இருபொம் மர் தாக்குதலை நடாத்தியது பெரும் பதற்றம் ஏற்பட்ட [illegible] அடுத்தடுத்து குண்டு இவ்விரு தாக்குதலும் டது. வீசித் தாக்கிய வண்ணமிருந்த சுமார் அரைமணி நேரம் (4-ம் பக்கம் பார்க்க)

## ஈழத்திற்காக உயிரைத்துறக்க புலிகள் தயாராயுள்ளனர்

### ஆரியரத்ன கூறுகிறார்

(கொழும்பு)

தென் பகுதியில் யுத்தத்தை விரும்புவர்கள் மனம் மாறி, சமாதானத்தைப் பற்றிப்பேச வேண்டும் என்று சர்வோதய தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன பி. பி. சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட் டுள்ளார்.

அவர்மேலும் கூறியதாவது: சிறுபான்மை மக்களின் சோக நிலையை நேரில் பார்த்தேன். அவர்கள் அடிப்படைவசதிகள் இன்றி அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆஸ் பத்திரிகளில் [illegible] கூட இல்லை. யாழ். அரசாங்க அதிபர் விமானக்குண்டு வீச்சால் சேதமடைந்த செயலகத்தின் ஓர் அறையில் இருந்து நிர் வாகத்தை நடத்துகிறார்.

யுத்தத்தை விரும்பும் தென் இலங்கையில் உள்ளவர்களுக்கு இது புரிய வேண்டும். புலிகள் ஈழத்திற்காக உயிரைத் தியாகம் செய்யும் நிலையில் உள்ளார்கள். படையினரை பொறுத்த மட்டில் அவர்கள் (2-ம் பக்கம் பார்க்க)

## 'ஜெ' அரசை விரைவில் கலைக்க ஆளுநர் சென்னாரெட்டி திட்டம்

(சென்னை)

தமிழகத்தின் தற்போதைய நிலைமையின் கடுமையை தான் உணர்ந்திருப்பதாகவும் மக்களின் கவலையை தான் புரிந்து கொண்டிருப்பதாகவும் தக்க தருணத்தில்தான் நடவடிக்கை எடுக்க தயங்கப்போவதில்லை என்றும் தமிழக ஆளுநர் சென்னாரெட்டி தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் தமிழக அரசு விரைவில் கலைக்கப்படலாம் என்றஊகம் அடிபடத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து வருவதையும் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் அதிகமாக ஊடுருவி வருவதையும், முதல்வரின் அனுபவமின்மையை (2-ம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் இலங்கைத் தமிழர் ஆயுதங்கள் சகிதம் மோதல்

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அண்மையில் இலங்கைத் தமிழர்களிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிஸில் இயங்கும் 'வீடியோ கிளப்' ஒன்றும் அண்மையில் தமிழ் இளைஞர்களால் தாக்குதலுக்குள்ளானதுடன் கடை உரிமையாளரான தமிழரும் கடைக்கு வெளியே இழுக்கப் பட்டு தாக்கப்பட்டுள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து தெல்லிப்பழை, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி நேற்று பல தடவை கடுமையான ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற் கொள்ளப்பட்டது. (2ம் பக்கம் பார்க்க)

## புலிகளே தமிழரின் ஏகப் பிரதிநிதிகள்

### — ஆயர் கென்னத்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்கின்றோம் என யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்த் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் மக்களின் சார்பில் விடுதலைப் புலிகள் முன்வைத் (4ம் பக்கம் பார்க்க)

● உள்ளூராட்சித் தேர்தல்

## வேட்பாளர்களுக்கு கொலை மிரட்டல்

(மட்டக்களப்பு,

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கொலைப் பய முறுத்தல்கள் விடப்பட்டு வருகிறதாம்.

பலருக்கு கொலை மிரட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளதாம். களுவாஞ்சிக்குடி (2-ம் பக்கம் பார்க்க)

## வாக்களிக்க மறுப்போரை பிடிக்குமாறு உத்தரவு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் தினத்தில் தமிழ் மக்களில் வாக் களிக்கக்கூடியவர்கள் அனைவரும் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்படுவர் என்றும் பின்னர் அவர்கள் வாக்குச் சாவடிக்கு கொண்டு செல்லப் (4-ம் பக்கம் பார்க்க)

● தமிழக கடலில்

## 4 இலங்கை மீனவர் இந்திய படையினரால் கைது

(சென்னை)

இலங்கை மீனவர் நால்வர் இந்திய கடலோர காவற் படையினரால் கைது செய் யப்பட்டனர்.

தமிழக கடற்பகுதியில் இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். தற் போது இவர்கள் தமிழக (4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

"ரெம்பின் 20 இல்" செய்த ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு. லோஸ்பவர் 1200 "பிறூஸ் எம்போறியம்" 38, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-797)

### A/L கணிதம்

தூயகணிதம், பிரயோக கணிதம் கற்க இருக்கும் மாணவர்க்குத் தனியாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B Sc 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி, (இ-798)

### சனி மாற்றம்

(11-2-94) சனி மாற்றம் ரூபா 10/- புதிய வெளியீடு. எங்கும் விற்பனையாகின்றது. சோதிடர் புத்தகசாலை (கே. கே. எஸ். வீதி), யாழ்ப்பாணம். (சி 800)

### மணப் பெண் தேவை

பிரான்சில் நிரந்தர வேலை பார்க்கும் 38 வயது கத்தோலிக்க மணமகனுக்குத் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்யலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (இ-803)

### அதே விலை

சர்வதேச சிறுவர் பாடசாலையின் பாலர் பாட நூல்களாக அங்கீகரிக்கப்பெற்ற அஷ்டலக்ஷ்மி. பாலர் தமிழ் A B C Book விற்பனைக்கு வந்துவிட்டது. மொத்தமாகவும், தனியாகவும் பெறலாம். விலை ரூபா 20/- ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், சிவா பிறின்டேஸ், கைதடி. (இ-795)

**உள்ளூராட்சி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பிரதேச சபையில் போட்டியிடும் சுந்தரலிங்கம் அருணமலிங்கம் என்பவருக்கு மிரட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாம்.

இக்கடிதத்தில், மக்களின் சார்பில் தேர்தலில் இருந்து விலகுமாறு கோரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஈழத்திற்காக**

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தொழில் ரீதியாகச் சேர்ந்துள்ளார்கள்.

ஆகவே யுத்தம் முடிவுற்ற பின்பே சமாதானத்தைக் கொண்டு வரமுடியும் என்ற கருத்து பிழையானது. தமிழ் சிங்கள மக்கள் சகோதரத்துவத்தின் மூலம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு சமரச முயற்சியில் ஈடுபடவேண்டும் என்றார். (ம-சி)

**ஜெ அரசை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யும் மத்திய அரசு கவிழ்த்து கவனித்து வருவதாகவும் திரு. சென்னாரெட்டி தெரிவித்தார்.

இதற்கிடையில் இன்று புதுடில்லி செல்லும் முதல்வர் ஜெயலலிதா தமது ஆட்சியைக் காப்பாற்றவும் மீண்டும் காங்கிரஸுடன் கூட்டுவைத்துக் கொள்ளவும் பிரதமர் நரசிம்மராவை சந்திப்பார் என பி. பி. ஸி. கூறியது. (இ)

**குடிமனைகளை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கும் நேற்றுக் காலை 9 மணிக்கும், இரவு 6-45 மணிக்கும் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இதேவேளை ஹெலிகொப்டர் ஒன்றும் அப்பகுதிகளை வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

சில வீடுகள் சேதமடைந்த தெனினும் மக்கள் எவரும் தெய்வாதீனமாக காயமடையவில்லை. (இ

## பாரிஸ் 'ஈழநாடு'வுக்கு 2 லட்சம் பிராங்க் நஷ்டம்

(பாரிஸ்)
பாரிஸிலிருந்து வெளிவரும் 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் மீது அண்மையில் இனம் தெரியாதோர் மேற்கொண்ட குண்டு வீச்சுச் சம்பவத்தின்போது, சுமார் 2 லட்சம் பிராங்குகள் நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது கம்பியூட்டர் சாதனங்கள் உட்பட பல பெறுமதியான இயந்திர சாதனங்களுக்கும் சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. ம-இ

---

உ
சிவமயம்

# மாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலயம்

ஆலயத்தின் அலங்கார உற்சவ காலத்தில்
மகாபாரதம் தொடர் சொற்பொழிவு ஆற்றிய
நல்லைக்குருமணியின் பிரதம சீஷ்யன்
கானகதாவரிதி
கந்தர்மடம்
**பிரம்மஸ்ரீ**
**சிவ. வை. நித்தியானந்த சர்மா**
அவர்களுக்கு

## ★ பாராட்டு விழா ★

நாள்: 15 - 2 - 94 செவ்வாய்க்கிழமை
நேரம்: மாலை 6-30 மணிக்கு
இடம்: ஆலய முன்றலில்

நிகழ்ச்சிகள்

வரவேற்புரை:
**திரு. கா. கணேசதாசன்**
(ஓய்வுபெற்ற அதிபர், உப செயலாளர், ஆலய ப. பா. ச.)

தலைமையுரை:
**திரு. செ. கனகரத்தினம்**
(தலைவர், ஆலய ப. பா. சபை)

ஆசியுரை — கௌரவித்தல்
**ஸ்ரீலஸ்ரீ**
**சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

நன்றியுரை:
**பிரம்மஸ்ரீ ப்ா. வசந்தசர்மா**
(ஆலய பிரதம குரு)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

**ஆலய பரிபாலன சபை.**

பிரசுர அன்பளிப்பு:
**எஸ். ரி. மெடிக்கல்ஸ்,**
490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-3827)

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை

(ஆசிரியை, யாழ்/கோண்டாவில் இந்து ம. வி.)

கல்வியிலே தேர்ச்சி பெற்று
கண்ணியமாய் நாம் வாழ்வதற்கு
நல்விதமாய் பணி செய்த
நம் ஆசானுக்கு அஞ்சலிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக

பிரம்மஸ்ரீ S. சிறிஸ்கந்தராசக் குருக்கள்.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (சி-807)

---

# இளம் கலைஞர் மன்றம் 14-வது இசை விழா

—o—o—o—o—o—o—o—o—o—o—o—

இடம்: **கலா மண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்.

3-ம் நாள்
**14-2-94 திங்கட்கிழமை**

**தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. ச, ஆதரவில்**

மாலை 4-30 — 5-00 மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| உதயநாதன் | எ. சிவகுமார் |
| ஆர். கோவிந்தராஜா | கே. மோகனதாஸ் |
| கே. சண்முகரத்தினம் | என். அம்பிகைபாகன் |
| ஆர். சிவகுமார் | கே. ராஜன் |
| எஸ். திலைநாதன் | கே. நாகேந்திரம் |

5-00 — 5-10 மிருதங்க இசை
கே. கோபு, ஜே. ஆர். அரன், எம். முரளீதரன்

5-10 — 5-30 பாட்டு
பாலசெல்வி யோகமணி
சுபாஷினி பலிக்கானனம்
ரோகினி அருளையா
தாட்சாயனி சிவஞானம்
} பாட்டு

கே. சுபத்திரா — வயலின்
எஸ். ஹரீதரன் — மிருதங்கம்

5.30 — 5.50 புல்லாங்குழல்
கே. விஜயதாசன்
எஸ். விஜேந்திரன்
} புல்லாங்குழல்

எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின்
எஸ். நாகராஜன் — மிருதங்கம்

5-50 — 6-10 பாட்டு
ஜ. சுமிதா, தி. கீதா, இ. அஷ்டலக்ஷ்மி
கோ. மனோஜோதி, இ. சரோஜினி,
கு. லொய்ஸ்கனிஷியா

ச. சுஜிந்திரா — வயலின்
ப. ரதிரூபன் — மிருதங்கம்

6-10 — 6-30 வயலின் இசை
சி. சுகன்யா, ச. சுஜிந்திரா, ஜ. சுகிர்தா
ரா. ஜயிந்திரா, த சந்தானலக்ஷ்மி, சி. தவராணி
யாமினி வஸ்தலா, இ. அமலன், ந. ரமணன்
சதா வேல்மாறன் — மிருதங்கம்

6-30 — 7-00 பாட்டு
ராஜஸ்ரீ பசுபதீஸ்வரசர்மா — பாட்டு
சுபத்திரா கணேசன் — வயலின்
பி. ரதிரூபன் — மிருதங்கம்

7-00 — 7-30 மங்களவிளக்கேற்றல்
1. திரு. செல்வராஜா (பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை எம். பி. சி. எஸ்)
2. திரு. க. சிவபாலன் (கே. கே. கே. வர்த்தகர்)
3. பிரம்மஸ்ரீ வெ. ரகுநாதஐயர்
4. திரு. இ. இராமநாதன் (பாலா)
5. A. G. செல்வராஜா (வர்த்தகர்)

தலைவர்: திரு நா. தவநாதன் (தலைவர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்)

பிரதம விருந்தினர்
திரு. நா. சுப்பிரமணியன்
(முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை)

சிறப்பு விருந்தினர்
திரு. ப. கனகரத்தினம் (அளவெட்டி ப. நோ. கூ. ச)

7-30 — 8-30 இசைக்கச்சேரி
வி. சிவஞானசேகரம் — பாட்டு
வி. கே. குமாரசாமி — வயலின்
கே. கஜன் — மிருதங்கம்
சி. தயோகநாயகம் — கடம்

8-30 — 9-30 கதகளி ஆடல்
"கலைக்கோவில்" வேலானந்தன் ஆடல் மன்றம்

வாழ்த்துவோர்:
**ஹரன் வர்த்தக நிலையம்**
K. K S. றோட், தட்டா தெருச் சந்தி
யாழ்ப்பாணம்
(ஏ- 3826)

# "நாம் தனித்துவமாக வாழ்வதற்கு பொருளாதார சுதந்திரமும் வேண்டும்"

## துணைவேந்தர் துரைராஜா உரை

(உடுவில்)

"எந்த ஒரு இனமும் தனித்துவமாக வாழ விரும்பினால் சுதந்திரம் மட்டும் பெற்றுவிட்டால் போதாது. பொருளாதார சுதந்திரமும் அதற்கு வேண்டும். எமது தமிழினத்தின் வளர்ச்சிக்கு பொருளாதார அபிவிருத்தியும் முக்கியமானது. பொருளாதார வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்தாவிடின் இவ்வளவு காலமும் நாம் கஷ்டப்பட்டுப் போராடிப் பெறவிருக்கும் சுதந்திரமும் வலுவற்றதாகி விடும்."

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ. துரைராஜா மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

எமக்கென்று ஒரு மொழி, கலை, கலாசாரம் இருக்கும்போது நாம் ஒரு தேசிய இனமாகக் கணிக்கப்படவேண்டிய நிலையில் உள்ளோம். அப்படி இருந்தும் நாம் இன்னும் அவலப்படுபவர்களாக இருப்பதற்குக் காரணம் பொருளாதார வளர்ச்சியின்மையே ஆகும்.

பொருளாதார வளர்ச்சிக்கு இயற்கை வளங்களான கடல்வளம், நிலவளம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதோடு, மனிதவளமாகிய கல்வியையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இயற்கை வளங்கள் குறைவாக இருப்பினும் மனித மூளை என்னும் வளங்களைப் பயன்படுத்தி பல நாடுகள் [illegible] பொருளாதார நெறியில் வளர்ச்சி கண்டுள்ளன. எனவே நாம் கல்வியை அழியவிடாது பேணிப் பாதுகாக்கவேண்டும்.

பல்கலைக்கழகம் புகுவதை நோக்கமாகக் கொண்டே எமது நாட்டுக் கல்வி புகட்டப்படுகிறது. இரண்டு சதவீதமானோரே பல்கலைக்கழகம் செல்ல, மீதி 98 சதவீதமானோர் வேறு துறைகளை நாடவேண்டிய நிலை காணப்படுகிறது. ஒரு பிள்ளை பாடசாலையை விட்டு வெளியேறும்போது ஒரு தொழிலைச் செய்து வாழக்கூடிய கல்வி முறை உருவாக்கப்படவேண்டும்.

1956-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மாணவரின் கல்வி நிலை திட்டமிட்டுப் பின்னடையச் செய்யப்பட்டு வருகிறது. தென்பகுதியில் அபரிமித வளர்ச்சி கண்டுள்ள கல்விநிலை இங்கு பின்னடைவையே கண்டுள்ளது.

பல்கலைக் கழகங்கள், திறந்த பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்ற பல கல்வி நிலையங்களில் பலவித பயிற்சி நெறிகள் நடத்தப்படுகின்றன. ஆனால் அவையெல்லாம் என்ன? எனக் கேட்கும் நிலையில் தெரியாத நிலையில் எமது பிள்ளைகள் உள்ளனர். உயர்கல்வி வசதிகளும் வாய்ப்புகளும் தமிழ் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை.

உபவேந்தரின் பாரியார் திருமதி ஆர். துரைராஜா மாணவிகளுக்குப் பரிசில்கள் வழங்கினார்.

சண்டிலிப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதயநாதனும் உரையாற்றினார். செல்வி கௌரி செல்வராசா வரவேற்புடன் ஆரம்பமான விழா செல்வி சமிறா ஜெகநாதனின் நன்றியுரையுடன் முடிவுற்றது. (109-இ)

### மணிவாக்கு

நம்முடைய உள்ளத்திலே விருப்பு விரைவில் மாறுவதுபோல இனவெறுப்பு விரைவில் மாறுவதில்லை.

—டாக்டர் மு. வரதராசனார்

## நமது நோக்கு

### பாடசாலை நேரம்...!

பாடசாலை நேரம் தினசரி எட்டுப் பாடவேளைகள்; பாட நூல்களையும்; பாடத்திட்டத்தையும் கற்பித்தலுக்கானவை. இவை உரிய முறையில் பயன்படுத்தினால் மாணவர் அறிவைப் பெறலாம்; பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறலாம்.

ஆனால், அறிவு மாத்திரமல்ல, திறன்கள், மனப்பாங்கு, ஒழுக்கம் போன்ற பிற விழுமியங்களையும் வளர்க்க வேண்டுமென்பது கல்விக் கொள்கை; பாடசாலைகளின் கடமை!

இதற்காகத்தான், தமிழ் ஆங்கில மொழித்திறன் போட்டிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள், சாரணீயம், பலதுறை மன்றங்கள் போன்றவற்றை பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

இவை பாடவிதான மேலதிகச் செயற்பாடுகள் (Extra- curricular activities என இருந்தபோதும் ஒரு சில மாணவர்கள் பரிசுகள் பெற, ஏனையவர்கள் அவர்களுக்குக் கைதட்டி உற்சாக மூட்டுபவர்களாக அமைய வேண்டுமா என்ற கேள்வி எழுந்தது.

எனவேதான், பாடவிதான இணைந்த தொழிற்பாடுகள் Co-curricular activities) என்ற அழுத்தம் கொடுத்து, கூடியளவு எல்லா மாணவர்களும் பங்குபற்ற வேண்டுமென்ற விளக்கத்துடன் சுற்று நிருபங்கள் வந்தன.

அந்த ரீதியில், இவ்வாண்டுத் தமிழ்த்திறன் போட்டிகள் பற்றி, 4-1-94 திகதியிடப்பட்ட வடக்கு கிழக்குக் கல்விப் பணிப்பாளரின் சுற்று நிருபம் வரவேற்கத் தக்கதாகும். பாடவேளைகளின் போதே, திறன்களை வளர்க்கும் திட்டம் நல்ல வழி காட்டலாகும்!

ஆனால், ஏனைய தொழிற்பாடுகள் பாடசாலை நேரத்தில் நடாத்தப்படக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு அமுல் நடத்தப்படுகிறது.

காலை ஏழு மணிக்கு அரைகுறை உணவோடு புறப்பட்ட பிள்ளைகள் மாலை மூன்று மணிக்கும் வீடு திரும்பவில்லையே அதிக உணவின்றா என்ற பெற்றோர் கவலை உருவாகி வருவதாகவும் சொல்லப்படுகின்றது.

விளையாட்டுப் போட்டிகள், சமய நிகழ்ச்சிகள் போன்றவற்றால், கற்றல் நேரம் பாதிக்கப்படும், பாடசாலைகளில் குழப்ப நிலை உருவாகின்றமை தவிர்க்கப்பட வேண்டும்.

அதேவேளை, யதார்த்த நிலை புரிந்து, மாணவர்களுக்கு - பிரயோசன இடைவேளை அல்லது வேறு ஒரு ஒழுங்குகள் பற்றிக் கவனத்திற்கு எடுக்காவிட்டால், அதிபர்கள், அதிகாரிகளுக்கும் பாடசாலைக்குமிடையே 'மத்தளம்' ஆகிவிடுவார்களோ?

அவசரக் கோலத்தில் அழுத்தங்களைத் திணிக்காது, நடைமுறைக்கேற்ற வழிகாட்டல்கள் வழங்கப்படும் என நம்புகிறோம்!

## தாக்குதல் பட்டியலில் சுவாமிக்கு முதலிடமாம்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியலில் தனது பெயர் முதலிடம் வகிப்பதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1991-ம் ஆண்டில் மேற்கொண்ட தேர்தல் சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள வேண்டாமென தம்மை விடுதலைப் புலிகள் முன்கூட்டியே எச்சரித்ததாக திரு. சுப்பிரமணியசுவாமி கூறிவரும் குற்றச்சாட்டில் உண்மையில்லை; அது அரசியல் நோக்கம் உடையது என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார். —இ

## தமிழகத்தில் புலிகள் ஊடுருவல் ஜனாதிபதி, பிரதமருக்கு மகஜர்

(சென்னை)

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடுருவல் அதிகரித்து வருவதாகவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் மகஜர் அளிக்கப்போவதாக தமிழக இ. காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வேலூரில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மோசமாகி வருவதாகவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு வைத்துள்ளார். இதனால் தமிழக காவல் துறையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். —இ

## நல்லின மரக்கறி விதைகள் விரைவில் இறக்குமதி

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினால் நல்ல இன இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகள், உரம், கிருமிநாசினி, விவசாய உபகரணங்கள் ஆகியன விரைவில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்படவுள்ளன.

மேற்படி பொருள்களை இங்கு கொண்டுவருவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும், கப்பல் வசதி கிடைக்கும் பட்சத்தில் இம்மாதம் இப் பொருள்கள் இங்கு வந்து சேரும் என்றும் மேற்படி சமாஜத் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் தெரிவித்தார். 72-இ

## வறிய மக்களுக்கு விவசாயக் கடன்

(யாழ்ப்பாணம்)

வறிய விவசாயிகளை விவசாயச் செய்கையில் ஈடுபடுத்தும் பொருட்டு அவர்களை நிரந்தர விவசாயிகளாக்கும் நோக்குடன் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கு தலா 6000 ரூபா வீதம் மொத்தம் 100 பயனாளிகளிற்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இக்கடனுதவி பணமாகவோ உள்ளீடுகளாகவோ கட்டங்கட்டமாக வழங்கப்படுகிறது. உழவு, விதைப்பு ஆகிய நடவடிக்கைகளின்போது பணமாகவும், உரம், கிருமிநாசினி என்பன பொருளாகவும் அறுவடையின்போது பணமாகவும் நான்கு கட்டங்களாக இக்கடன் வழங்கப்படுகிறது. இதனால் வறிய நிலையில் இருக்கும் விவசாயிகளும் நெற்செய்கையில் ஈடுபடக் கூடியதாயுள்ளது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கும் இன்று 14-ம் திகதி திங்கள் மாலை 2 மணிக்கு நாழ் அத்தியார் இந்துக் கல்லூரியில் கூட்டம் நடைபெறும்.

அன்னைபூபதி பொது அறிவுப் போட்டி, ஈழ ஆசிரியர் விடயங்கள், விளக்கு சஞ்சிகை விடயம், கல்வி மேம்பாட்டுக்கழக நிதியம் போன்ற விடயங்கள் பற்றி கூட்டத்தில் கலந்துரையாடப்படும். —இ

## முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விவலயத்தில் [illegible] முதன்மை ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ்: (பருத்தித்துறை-மருதங்கேணி கோட்டம்) 1, ஆங்கிலம்: (தெல்லிப்பழைக் கோட்டம்)-1, சமூகக் கல்வி: (பருத்தித்துறை, மருதங்கேணி 1, கணிதம்: பருத்தித்துறை, மருதங்கேணி) 1, ஆரம்பக்கல்வி: பருத்தித்துறை,மருதங்கேணி 1, ஆங்கிலம்: (மருதங்கேணி) 1, மனையியல் (கோப்பாய்) 1.

விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி 18-02-1994, பரீட்சை 25ம் திகதியில் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நிகழும். நேர்முகப் பரீட்சை 25ம் திகதி பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும். —இ

## இராசிபலன்

14 2 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி 2)

சதுர்த்தி பி. இ. 2-06 வரை. உத்தரட்டாதி மாலை 7-11 வரை. சதுர்த்தி விரதம், சித்தயோகம், இராகுகாலம் காலை 8-03 முதல் 9-33 வரை. சுபநேரம் நண்பகல் 12-33 முதல் 2-03 வரை.

மேடம்: கஞ்சத்தனம், பிறர் தொல்லை, அநாவசிய செலவு.

இடபம்: வாக்கு வன்மை, அவசிய கடமை, குடும்ப நலன்.

மிதுனம்: அதிகாரிகள் உதவி, தொழில் சிறப்பு, வெளியுலகச் செய்தி.

கடகம்: உதாசீனம், குடும்ப விரிசல், அலங்காரம்.

சிங்கம்: வாக்கு தவறுதல், குடும்ப சச்சரவு, அலைச்சல்.

கன்னி: பணிந்து போதல், தொழில் லாபம், கடமை உணர்வு.

துலாம்: காரிய சித்தி, சமாதான முயற்சி, பரோபகாரம்.

விருச்சிகம்: விஷேச சிந்தனை, புத்தி தடுமாற்றம், மனக்குழப்பம்.

தனுசு: குடும்ப சிக்கல், வேண்டாத உறவு, காதுவலி.

மகரம்: தொழில்போராட்டம், புதிய முதலீடு, பொதுப் பணிக்கு வருதல்.

கும்பம்: சகோதர தகராறு, மனசஞ்சலம், குடும்பத்தில் குறைகேட்டல்.

மீனம்: எண்ணியது கைகூடும், வரவுக்கு மீறிய செலவு, தானதர்மம்.

— ஜோஸ்யர்

## விவசாயிகளுக்கு உள்ளீடு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவசாய உள்ளீடுகள் கிடைப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப்பகுதி முயற்சித்து வருகிறது.

கிளிநொச்சிக் கோட்டத்தில் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து விவசாயிகளுக்கு உரிய முறையில், உரிய நேரத்தில் விவசாய உள்ளீடுகளான உரம், எரிபொருள் என்பவற்றின் விநியோகத்தை நெறிப்படுத்தி வருகிறது.

இதனால் விவசாயிகளிற்கு இவ்வுள்ளீடுகள் சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. இந்நடவடிக்கைகளால் விவசாயிகள் பெரும் பயனடைந்து வருகின்றனர்.

**உரம் இல்லை என்று சொல்லாதே - இயற்கை உரம் உன் காலடியில் மறவாதே**

# கிழக்கில் தேர்தலின்போது வன்முறைகள் வெடிக்கலாம்

## புலிகளின் ஆபத்தும் உண்டாம்

(கொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலின் முன் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் இருப்பதாக அரசு அஞ்சுகிறதாம்.

இத்தேர்தலுக்கு புலிகளால் ஏதும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில் தேர்தல் நடைபெறும் இடங்களில் எச்சம் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளனராம்.

இதேவேளை தேர்தல்மோசடிகள் பெருமளவில் இடம்பெறலாமென அவதானிகள் கூறுகின்றனர். அரச தரப்பினரும் தமிழ்க்குழுக்களும் தமதுவெற்றிக்காக பல மோசடி நடவடிக்கைகளில் இப்போதே ஈடுபடத் தொடங்கிவிட்டனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தேர்தல் பாதுகாப்பிற்கென ஆயிரக்கணக்கான படையினர் கிழக்கில் குவிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே. (சி)

# யப்பான் மீது அமெரிக்கா வர்த்தகத் தடை விதிக்கும்

(வாஷிங்டன்)

யப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டதைத் தொடர்ந்து யப்பான் மீது வர்த்தகத் தடைகளைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக 'வாஷிங்டன் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

யப்பான் மீது வர்த்தகத் தடை கொண்டு வரப்படுமானால் அமெரிக்கா பெரிதும் பாதிக்கப்படும் என்று யப்பானிய நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் உள்நாட்டுக் கைத்தொழில் யப்பானிய நிறுவனங்களில் தங்கியிருப்பதே இதற்கான காரணமாகும்.

வாஷிங்டனில் ஜனாதிபதி பில்கிளின்டனுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் யப்பானிய பிரதமர் ஒசாகா டோக்கியோ போய்ச்சேர்ந்துள்ளார். மூன்று மணிநேரம் நடந்த பேச்சுவார்த்தைகளின் எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லை.

அடுத்த நடவடிக்கை தொடர்பாக தமது நாடு ஆராய்ந்து வருவதாக அமெரிக்க அதிபர் கூறியுள்ளார். -ம-சி

பொஸ்னியாவில்

# சேர்பிய படையினர் பிடித்த இலங்கை அதிகாரி விடுதலை

(சரஜேவோ)

பொஸ்னியாவில் யு. என். எச். சி. ஆர். ஊழியராக பணியாற்றிவரும் இலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணியான திரு. இம்தியாஸ் ரத்னசுகடந்த 4 தினங்களாக பொஸ்னியாவின் சேர்பிய படையினரால் கைதுசெய்யப்பட்டு பணயமாக வைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யப்பான் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் இவ்விடயத்தில் தலையிட்டு முயற்சிகள் எடுத்ததை அடுத்தே இந்த அதிகாரி விடுவிக்கப்பட்டாராம்.

அமைச்சர் ஹமீத் நியூயோர்க்கிலுள்ள தூதரகத்துடனும், புடாபெஸ்ற்றிலுள்ள தூதரகத்துடனும் தொடர்பு கொண்டு ராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இதையடுத்து இவர் விடுவிக்கப்பட்டு தற்போது பாதுகாப்பாக இருப்பதாக கண்டியில் உள்ள இவரது குடும்பத்தினருக்கு அமைச்சர் ஹமீத் அறிவித்துள்ளார். (ஐ)

வடக்கிற்கான

# அத்தியாவசிய சேவையில் தபால் விநியோகம் இல்லை

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கான தபால் சேவை ஒழுங்கை சீர்செய்ய தபால் திணைக்கள அதிகாரிகளே முயற்சிக்க வேண்டும் என அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளரும் நாடாளுமன்ற விவகார அமைச்சு செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா குறிப்பிட்டார்.

தபால்சேவைகள் மக்களின் முக்கிய தொடர்பு சாதனமானதால் தங்கள் அமைச்சு தபால் சேவையை வடக்கிற்கு சீர்செய்யுமா என நிருபர்கள் கேட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

மேலும் எமது அமைச்சு விநியோக சேவையை அத்தியாவசிய சேவையாக கருதவில்லை. முன்னைய தபால் திணைக்களத்தினரின் திறமையின்மையே தற்போதைய தபால் விநியோக சீர்கேட்டுக்கு முக்கியகாரணமாகும் எனவும் கூறினார். (கே-வி)

சகல கட்சிகளும் இணைந்து

# இனப்பிரச்னையை தீர்க்கவேண்டும்

(கொழும்பு)

சகல கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டின் இனப்பிரச்னையை தீர்க்கமுடியுமென ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கூறியுள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் மேலும் கூறுகையில்;

இன்று நாட்டில் 36 அரசியல் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் தம்மை பதிவு செய்துள்ளன. வடக்கு-கிழக்கில் இயங்கி வரும் கட்சிகளும் பதிவுசெய்துள்ளன. ஜனநாயகத்தை உண்மையாக கடைப்பிடிப்பதாக இருந்தால் அவையும் தேர்தலில் இறங்கவேண்டும். அல்லது தேர்தலிற்கு எந்தவித பங்கமும் செய்யக் கூடாது எனவும் கூறியுள்ளார். (சி)

# "எந்தப் பிரச்னையையும் பேசித் தீர்க்கலாம்" — பிரதமர் ரணில்

(கொழும்பு)

எமது பிரச்னைகளை எமக்குள் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். சகல இன மக்களும் ஐக்கியப்பட்டு செயற்படுவதன் மூலமே நமது நாடு முன்னேறமுடியும். அதன் மூலம் நமக்கு நாமே நிலைத்தைச் செய்வோம்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்;

இனங்களிடையே மத, கலாசார முறைகள் நல்லுறவை வளர்க்கின்றன. சிலசமயங்களில் வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு அவற்றை பேசித் தீர்க்கவேண்டும்.

எந்தப்பிரச்னையாக இருந்தாலும் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் எனவும் பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார். -சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

**தூய தமிழில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ழில் பெயர்களை வைப்பதற்கு வர்த்தகர் சமூகங்கள் உடன்பாடு தெரிவித்தன.

மேலும் பத்திரிகைகள், வாரமாத சஞ்சிகைகளில் தூய தமிழ் சொற் பிரயோகங்கள் குறித்தும், பாடசாலை மாணவர் மத்தியிலும், தமது பிள்ளைகளின் பெயர்களை தூய தமிழில் வைப்பது குறித்தும் ஆராயப்பட்டது. இந்த முயற்சியில் தமிழீழ சங்க வளர்ச்சிக் கழகம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன், தமிழீழ நிதிப்பொறுப்பாளர் திரு. தமிழேந்தி, வித்துவான் சொக்கன் ஆகியோர் உரை வழங்கினர். (ஐ)

மட்டக்களப்பில்

# ஐ. தே. க. ஆதரவாளர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஐ. தே. க.வின் ஆதரவாளர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலை பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சூட்டுச் சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தெற்கில் மீண்டும் ஜே.வி.பி. நடவடிக்கை

(கொழும்பு)

ஜே. வி. பி. யினரின் நடவடிக்கை மீண்டும் தென்பகுதியில் தலைதூக்கும் அபாயம் இருப்பதாக பொலிஸ் தலைமையகம் பாதுகாப்பு பிரிவுக்கு அறிவித்துள்ளது.

தென்பகுதியில் ஜே. வி. பி. நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வெலியத்த, தங்காலை, எம்பிலிப்பிட்டிய, மகியங்கனை பகுதிகளில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனராம்.

இதனை தொடர்ந்து ஜே.வி.பி.யின் நடவடிக்கை தொடர்பாக மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (சி)

# போப்பாண்டவர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

போப் இரண்டாம் ஜோன் போல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20ம் 21ம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

போப் இரண்டாம் ஜோன் போலை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி விஜயதுங்க அனுப்பியுள்ள தனிப்பட்ட அழைப்பு அடங்கிய கடிதத்தை, கடந்த வாரத்தில் இலங்கை அதிகாரிகளில் இருவர் போப் இரண்டாம் ஜோன் போலிடம் சமர்ப்பித்திருந்தனர்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் வேளையில் இலங்கைக்கும் வர இருப்பதாக போப் இரண்டாம் ஜோன் போல் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளார். இலங்கையில் அவர் சமய நிகழ்வுகளில் கலந்து கொள்ள இருக்கின்றார். (ம-சி)

**புலிகளே**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் இலங்கையின் ஏனைய பகுதி மக்களுடன் ஒப்பிடும் போது மிகவும் கவலை தருவதாக உள்ளதாகவும் தமது நல்லெண்ண முயற்சிகளை எவ்வளவு விரைவில் மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவில் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். (ஐ-சி)

**சிறுமி மரணம்**

(சாவகச்சேரி)

பண்ணுதர் குடியிருப்பைச் சேர்ந்த மணிவண்ணன் கிருஸ்ணப் பிரியா (07 வயது) என்ற சிறுமி செப்ரிசிமியாவுக்குள்ளாகி நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி மருத்துவமனையில் மரணமானார். ஏற்கனவே மேற்படி குடியிருப்பில் மூன்று வயது குழந்தை ஒன்றும் இவ்நோய்க்குள்ளாகி சென்றகிழமை பலியானதும் தெரிந்ததே. (155-சி)

**நேற்றுக் காலை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமான, ஹெலிதாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கட்டுவன், புன்னாலைக் கட்டுவன் பகுதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து ஷெல்தாக்குதலும் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டது. பலவீடுகள் இதனால் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

**பரிஸில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கடையில் தமிழீழ ஆதரவு வீடியோ படங்கள் விற்கப்பட்டு வருவதாகவும் இதனை விரும்பாத ஆயுதபாணிகளான சில தமிழ் இளைஞர்களே கடையைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்றொரு மோதலின்போது துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாகவும் இதில் சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

**இனத்துவேஷம்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏமாற்றி வருகிறது. இப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண அரசு விரும்பினால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு, மேலதிக அதிகாரங்கள் உள்ளடங்கிய யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார்.

இன்று தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களவரை கிளர்ச்சி கொள்ள வைக்கும் உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. தமிழ் மக்களுக்கு எதிரான இனத்துவேஷம் கொண்ட தலைவர்கள் ஒன்று சேர்கிறார்கள் எனவும் கூறினார். (ஐ)

**தமிழக**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பல இலங்கை மீனவர்கள் பலர் இந்திய படையினரால் கைது செய்யப்பட்டு தமிழக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

**வாக்களிக்க**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுவர் என்றும் இராணுவத்தினர் தமிழ் மக்களை மிரட்டியுள்ளனர்.

வாக்களிக்கச் செல்லாது இருக்கும் மக்கள் அனைவரையும் தாம் பிடித்துச் செல்லப்போவதாகவும் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்து வருகின்றனர்.

இதேவேளை தங்களை ஆதரிக்கும்படி வேட்பாளர் என்று கூறிக்கொள்ளும் சிலர் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்கிறார்கள். வாக்களிக்காது இருக்கின்றவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வாக்களிப்பில் அங்கீகரிப் போக்கு அவதானிக்கப்படுமிடத்து அந்தந்தப் பகுதிகள் மீது தாவுகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத்தினர் மிரட்டிவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-சி)